***முதலமைச்சர் கௌரவ சிவநேசதுரை சந்திரகாந்தன் அவர்களின் தலைமையிலான கிழக்கு மாகாண நிறைவேற்றுத்துறையின கொள்கை அறிக்கை.***

***கௌரவ தவிசாளர் அவர்களே!***

*எனது தலைமையிலான கிழக்கு மாகாண சபையின் நிறைவேற்றுத்துறையின் கொள்கை அறிக்கையை இச் சபையின் முன் சமர்ப்பிப்பதில் நான் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன். இக்கொள்கை அறிக்கை அடுத்துவரும் 18 மாதங்களுக்கும் பொருந்தும்.*

## *1.* ***புனர்வாழ்வும் மீள் குடியேற்றமும்***

*கடந்த கால் நூற்றாண்டு காலமாக நமது மாகாணத்தில் மக்களின் இடம் பெயர்வு பாரிய அளவில் நடைபெற்றுள்ளது. புல்மோட்டை, திரியாய், தென்னமரவாடி, முதலிக்குளம், மூதூர், சம்பூர், வாகரை, புல்லுமலை, வடமுனை, ஊற்றுச்சேனை, உடும்பங்குளம் முதலிய இடங்களிலிருந்து இடம்பெயர்வுகள் பெரும் அளவில் இடம் பெற்றுள்ளன. அம்மக்களுள் பலர் வேறு மாகாணங்களிலும், இந்தியாவில் தமிழ் நாட்டிலும், தற்காலிகமாக வசித்து வருகின்றனர். அவர்களையெல்லாம் மீளக் குடியமர்த்துவது எமது கடமை. அக் கடமையிலிருந்து நாம் தவற மாட்டோம். இடம் பெயர்ந்த நமது மக்களை மீண்டும் அவர்களது பாரம்பரிய வதிவிடங்களில் நாம் குடியமர்த்துவோம்.*

*கடந்த கால் நூற்றாண்டு காலத்தில் கிழக்கு மாகாணத்தில் மாத்திரம் 130,000 வீடுகள் அழிவுற்றோ சேதமடைந்தோ உள்ளன. அவற்றையெல்லாம் பதிலீடு செய்யவோ அல்லது திருத்தவோ நாம் நடவடிக்கை எடுப்போம்.*

*புனரமைப்புப் பணிகளை துரிதமாகவும், வெளிப்படையாகவும் நடைமுறைப்படுத்துவதற்காக நாம் மாகாண புனரமைப்பு அதிகாரத்துறை ஒன்றினை நியதிச்சட்டம் மூலம் தாபிப்போம்.*

*இளைஞர்களுக்கும், யுவதிகளுக்கும் புனர்வாழ்வு அளிப்பதற்கு எமது நிறைவேற்றுத்துறை முன்னுரிமை அளிக்கும் என்பதையும் நான் இங்கு சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.*

*நமது மக்களை மீளக் குடியமர்த்துவதற்கும், குடிமனைகளைக் கட்டுவதற்கு அல்லது திருத்தியமைப்பதற்கும் நாம் நேசநாடுகளின் உதவிகளையும் அரச சார்பற்ற நிறுவனங்களின் உதவிகளையும் பெருமளவு எதிர்பார்த்திருக்கின்றோம்.*

## *2.* ***சட்டமும் ஒழுங்கும்***

*மக்களை மீளக் குடியமர்த்துவதற்கும் அம் மக்கள் பயமின்றி வாழ்வதற்கும் மாகாணத்தில் சட்டமும் ஒழுங்கும் பேணப்படல் வேண்டும். அதற்கான பொலிஸ் அதிகாரத்தை எமது நிறைவேற்றுத்துறை எதிர்பார்த்துக் கொண்டு இருக்கின்றது. சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டுவதில் எனது தலைமையிலான நிறைவேற்றுத்துறை எந்தவிதமான பாரபட்சமும் காட்டாது. மாகாணத்தைச் சேர்ந்த பொலிசார், தமிழர், முஸ்லீம்கள், சிங்களவர் என்ற பேதமின்றி தமது கடமைகளை நிறைவேற்ற வேண்டுமென்பது எமது கொள்கையாகும்.*

*சட்டத்தையும் ஒழுங்கையும் நிலை நாட்டுவதற்காக பெருமளவில் தமிழர்களையும் முஸ்லீம்களையும் கிழக்கு மாகாண பொலிஸ் பிரிவினுள் நாம் உள்வாங்குவோம். ஒவ்வொரு பொலிஸ் நிலையத்திலும் சிங்கள, தமிழ், முஸ்லீம் இனங்களைச் சேர்ந்த பொலிஸ் உத்தியோகத்தர்கள் கடமையாற்ற வேண்டுமென்பதே எமது கொள்கையாகும்.*

*3* **கல்வி**

*யுத்தத்தாலும் சுனாமியாலும் பல பாடசாலைகள் பாதிக்கப்பட்டுள்ளன. அவை அனைத்தின் புனரமைப்பையும் அடுத்த 18 மாதங்களுள் செய்து முடிப்போம். அத்துடன், தண்ணீர் வசதி, கழிவறைகள், விளையாட்டுத் திடல்கள் ஆகியவை இல்லாத பாடசாலைகளுக்கு அவ்வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்போம்.*

*வறுமை காரணமாகவும், யுத்தம் காரணமாகவும் நமது மாகாணத்தின் சில பகுதிகளில் சிறார்கள் கல்வி கற்பதைக் கைவிட்டு விட்டார்கள். 100% ஆரம்பக்கல்வியை உறுதிப்படுத்தும் வண்ணம் அவ்வாறு பாதிக்கப்பட்ட மாணவர்களுக்காக மதிய உணவுத் திட்டமொன்றை நடைமுறைப்படுத்த நாம் நடவடிக்கை எடுப்போம்.*

*நமது மாகாணத்தின் சில நகரங்களில் மக்கள் செறிவு அதிகரிப்பை தடுப்பதற்காக அந் நகரங்களிற்கு அண்மிய பகுதிகளில் உள்ள பாடசாலைகளைத் தரம் உயர்த்த நாம் நடவடிக்கை எடுப்போம்.*

*மாகாணத்தின் பல பாடசாலைகளில் ஆசிரியர் பற்றாக்குறை நிலவுவதை நாம் காணக் கூடியதாக இருக்கின்றது. ஆசிரியர்களுக்குரிய வெற்றிடங்களை நிரப்புவதில் எனது நிர்வாகம் கூடிய கவனம் செலுத்தும்.*

*4* **உயர் கல்வி**

*இதுகால வரையும் உயர் கல்வியானது மத்திய அரசாங்கத்தின் பொறுப்பிலேயே இருந்து வந்துள்ளது. வருங்காலத்தில் எமது நிறைவேற்றுத்துறை உயர் கல்வியிலும் ஈடுபட முடிவு செய்துள்ளது. கிழக்குப் பல்கலைக்கழகத்தின் திருகோணமலை வளாகத்தை மத்திய அரசாங்கத்திடமிருந்து பொறுப்பேற்று, முழுமையான ஒரு மாகாண பல்கலைக் கழகத்தை தாபித்து எந்திரவியல், மருத்துவம், சட்டம், கல்வியியல், வணிக நிர்வாகம், கடல்சார் விஞ்ஞானம், இந்து சமய கற்கையியல் முதலிய பீடங்களை ஏற்படுத்த நாம் நடவடிக்கை எடுப்போம். அத்துடன் கிழக்கு, தென்கிழக்கு பல்கலைக்கழகங்களில் தகவல் தொழில்நுட்ப பீடம், நாட்டுப்புகலைப்பீடம் போன்றவற்றை உருவாக்க நடவடிக்கை எடுப்போம்.*

*5* **சுகாதாரப் பராமரிப்பு**

*கிழக்கு மாகாணத்தில் பல சுகாதாரப் பராமரிப்பு நிலையங்கள் யுத்தத்தாலும், சுனாமியாலும் பாதிக்கப்பட்டுள்ளன. அவை அனைத்தையும் புனரமைப்பதற்கு நாம் நடவடிக்கை எடுப்போம்.*

*அத்துடன், மாகாணத்திலுள்ள மருத்துவர், தாதியர், பரிசாரகர் முதலிய பதவிகளில் உள்ள வெற்றிடங்களை நிரப்புவதற்கும் எனது நிர்வாகம் நடவடிக்கை எடுக்கும்.*

*மேலும், திருகோணமலை மாவட்டத்தில், ஸ்ரீ ஜயவர்தனபுர வைத்தியசாலை போன்ற நவீன வைத்தியசாலை ஒன்றையும் தாபிக்க எனது நிறைவேற்றுத்துறை நடவடிக்கை எடுக்கும்.*

*6* **வாழ்க்கைத் தொழில்சார் கல்வி**

*இளைஞர்கள் மத்தியிலும் யுவதிகள் மத்தியிலும் வேலை வாய்ப்புக்களை ஏற்படுத்துவதற்காக தொழில்சார் கல்விக்கும், பயிற்சிக்கும் நாம் முன்னுரிமை கொடுப்போம். ஒவ்வொரு வருடமும் 3,000 இளைஞர்களுக்கும், யுவதிகளுக்கும் நாம் பயிற்சி அளிக்கத் திட்டமிட்டுள்ளோம்.*

*7* ***வீதிகள்***

*மட்டக்களப்பு வாவியைக் கடக்கும் வலையிறவுப் பாலம், பட்டிருப்புப் பாலம் ஆகியவை சேதமடைந்துள்ளமையால், அவற்றிற்கு மாற்றீடாக புதிய பாலங்கள் அமைப்பதற்கு நாம் நடவடிக்கை எடுப்போம். அத்துடன், மண்முனையிலும் குறுமண்வெளியிலும் புதிய பாலங்கள் இரண்டை கட்டமைத்து எழுவான்கரைக்கும் படுவான்கரைக்கும் இடையிலான தொடர்பை வலுப்படுத்துவதற்கான பணிகளை நாம் ஆரம்பிப்போம். வெருகலில் பாலம் ஒன்றையும் கட்டமைப்போம்..*

*மேலும், மாகாண நிர்வாகத்தின் கீழ்வரும் வீதிகளைப் புனரமைப்பு செய்வதுடன், மட்டக்களப்பு - திருகோணமலை வீதி, மட்டக்களப்பு – மண்ணாம்பிட்டி வீதி, திருகோணமலை – புல்மோட்டை வீதி, அம்பிலாந்துறை – கரடியனாறு வீதி, திருகோணமலை - ஹபறண வீதி, திருகோணமலை – வவுனியா வீதி, திருகோணமலை – அனுராதபுரம் வீதி, ஆகியவற்றை புனரமைப்பதற்கும், மேம்படுத்துவதற்கும் மத்திய அரசாங்கத்துடன் சேர்ந்து உழைப்போம்.*

*8* **போக்குவரத்து**

*கிழக்கு மாகாணத்தில், போக்குவரத்து மிகவும் பின் தங்கிய நிலையில் உள்ளது. இதை ஓரளவு நிவர்த்தி செய்வதற்காக, எமது நிறைவேற்றுத்துறையானது மாகாண பஸ் கம்பனி ஒன்றை நியதிச் சட்டம் மூலம் தாபிக்கும்.*

*மேலும் திருகோணமலைக்கும் கொழும்புக்கும் இடையில் நாளாந்தம் இரண்டு கடுகதிப் புகையிரத சேவையையும், மட்டக்களப்புக்கும் கொழும்புக்கும் இடையில் நாளாந்தம் ஒரு கடுகதிப் புகையிரத சேவையையும் மேற்கொள்வதற்கான ஏற்பாடுகளை நாம் மத்திய அரசாங்கத்துடன் சேர்ந்து செய்யத் திட்டமிட்டுள்ளோம்.*

*அத்துடன், திருகோணமலைக்கும் மட்டக்களப்புக்கும் இடையில் கல்லோயா சந்தி ஊடாக அடிக்கடி பயணம் செய்யும் ரயில்கார் சேவையை மேற்கொள்வதற்கும் நாம் நடவடிக்கை எடுப்போம்.*

*மேலும், திருகோணமலையிலுள்ள புகையிரத திணைக்களத்தின் பட்டறையை நவீன மயப்படுத்துவதற்கான ஒத்துழைப்பை நாம் மத்திய அரசாங்கத்திற்கு வழங்குவோம். அவ்வாறு நவீன மயப்படுத்தப்பட்ட பட்டறையில், எஞ்சின்கள், புகையிரத வகன்கள் மற்றும் ரயில்கார்கள் ஆகியவற்றிற்கான திருத்தங்களை மேற்கொள்ள முடியும்.*

9. **மின்சக்தியும் மாற்று சக்தியும்**

*இலங்கை மின்சாரசபை மேற்கொள்ளும் கிராமிய மின்சார விஸ்தரிப்புத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக மாகாண மின்சார வாரியம் ஒன்றினை தாபித்து மத்திய அரசாங்கத்திற்கு உறுதுணையாக இருப்பதற்கு நாம் முன்வருவோம்.*

*அத்துடன், பெற்றோலியத்தின் உலகச் சந்தை விலை நாளுக்கு நாள் ஏறிக்கொண்டு வருவதால் மாற்று சக்திகளை உற்பத்தி செய்யும் ஏற்பாடுகளில் நாம் ஈடுபடுவோம்.*

10 **விவசாயமும் கமநலசேவையும்.**

*கிழக்கு மாகாணத்தில் விவசாயம் பன்முகப்படுத்தப்படும். நெல் மட்டுமல்லாது, மரக்கறி, பழவகைகள், பருப்பு வகைகள், கரும்பு போன்றவற்றை உற்பத்தி செய்வதற்கும் ஊக்கமளிப்பதுடன் அவ்வுணவுப் பொருட்களை சந்தைப்படுத்தும் முறைகளையும் நாம் நவீனமயப்படுத்துவோம். குறிப்பாக "கொச்சிபாம்" என அழைக்கப்படும். விவசாயத்திட்டத்தை மீள உருவாக்கி படுவான்கரைப் பிரதேசத்தில் உற்பத்திக்கு முன்மாதிரியாக இயங்கவைப்போம்.*

*விவசாயிகளுக்குத் தேவையான அனைத்து வசதிகளையும் செய்து கொடுப்பதுடன், நெல்லைக் களஞ்சியப்படுத்துவதிலும் உதவி வழங்க நடவடிக்கை எடுப்போம்.*

11 **கால்நடை அபிவிருத்தி**

*கால்நடை அபிவிருத்திக்கு எமது நிறைவேற்றுத்துறை முன்னுரிமை வழங்கும். இத்துறை மூலம் பெண்களுக்கு தொழில் வாய்ப்புக்கள் வழங்க முடியும்.*

*பண்ணைகளில் பால் உற்பத்தியைப் பெருக்குவதற்காக உயர் ரக பசு மாடுகளை வழங்கும் திட்டமொன்றும் நடைமுறைப்படுத்தப்படும்.*

*மூதூர் பகுதியிலும் மட்டக்களப்பில் படுவான் கரைப்பகுதியிலும் அம்பாறை மாவட்டத்திலும் கால்நடை அபிவிருத்திக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படும். அப்பகுதிகளில் பால் பண்ணைகளையும் பால் பதனிடும் தொழிற்சாலைகளையும் தாபிப்பதற்கு எமது நிர்வாகம் நடவடிக்கை எடுக்கும்.*

*கரடியனாறு பண்ணையை மீள கட்டியமைப்பதோடு இன்னுமொரு பண்ணையை விநாயகபுரம் என்னுமிடத்தில் ஏற்படுத்துவோம்.*

12 **கிராமிய அபிவிருத்தி**

*பனை அபிவிருத்தி, குறுநில தென்னை அபிவிருத்தி, மரமுந்திரிகை அபிவிருத்தி போன்றவை மூலம் பெண்களுக்கு வேலை வாய்ப்புக்களை ஏற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுப்போம். இவ்வாறான அபிவிருத்தி மூலம் பெறப்படும் பொருட்களை ஏற்றுமதி செய்வதற்கும் நடவடிக்கை எடுப்போம்.*

## 13 *உள்ளூராட்சி*

*உள்ளூராட்சி மன்றங்கள் மூலம் கிராமங்களுகான நீர் வழங்கல் திட்டங்களையும் கிராமிய வீதி அபிவிருத்தித் திட்டங்களையும் நாம் மேற்கொள்வோம்.*

*மட்டக்களப்பு நகரத்திற்கு ஒரு நவீன பஸ் தரிப்பு நிலையத்தை கட்டமைப்பதற்காக நாம் நடவடிக்கை எடுப்போம்.*

*திருகோணமலை நகர சபையையும் உப்புவெளி பிரதேச சபையையும் ஒன்றிணைத்து திருகோணமலை நகரத்திற்கு மாநகரசபை ஒன்றை தாபிப்பதற்கு நாம் நடவடிக்கை எடுப்போம்.*

*மாகாணத்திலுள்ள அனைத்து நகரங்களிலும் குப்பை அகற்றும் பணியை நவீன மயப்படுத்துவதற்கு நாம் நடவடிக்கை எடுப்போம்.*

*உள்ளூராட்சி உறுப்பினர்களுடைய கடமைகள், அதிகாரங்கள் பற்றிய பட்டறைகளையும் கருத்தரங்கங்களையும் நடாத்தி, மாகாணத்திலுள்ள அனைத்து உள்ளூராட்சி உறுப்பினர்களுக்கும் அவர்களது பணிகளை செவ்வனே செய்வதற்கு உதவி புரிவோம்.*

## 14 *விளையாட்டுத்துறை*

*மாகாணத்திலுள்ள அனைத்து பாடசாலைகளிலும் விளையாட்டுத்துறையை ஊக்குவிப்போம். அத்துடன் சர்வதேச விளையாட்டுப் போட்டிகளை நடாத்தக் கூடிய அரங்கம் ஒன்றினை கட்டமைப்புச் செய்வதற்கும் நடவடிக்கை எடுப்போம்.*

## 15 *காணி*

*கடந்த காலங்களில் மாகாணத்திலுள்ள அரச காணிகள் எவ்வாறு வழங்கப்பட்டன என்பது பற்றி நிபுணர் குழு ஒன்றின் அறிக்கையைப் பெறுவதற்காக எனது நிர்வாகம் நடவடிக்கை எடுக்கும். அதன் பின்னரே எதிர்காலத்தில் காணி வழங்கப்படுவதற்கான கொள்கை வகுக்கப்படும்.*

*திருகோணமலை மாவட்டத்தில் லிங்கநகர் பிரதேசத்திலுள்ள காணித் தகராற்றைத் தீர்ப்பதற்கும் தமிழப் பல்கலைக்கழக இயக்கத்தினரின் காணிகளில் குடியேற்றப்பட்டவர்களின் சொத்துரிமைப் பிரச்சனையைத் தீர்ப்பதற்கும் நாம் நடவடிக்கை எடுப்போம்.*

## 16 *வீட்டு வசதி*

*ஆசிரியர் சேவையிலிருப்பவர்களுக்கும் சுகாதார சேவையில் பணி புரிபவர்களுக்கும் அவரது வேலைத் தலங்களுக்கண்மையில் குடிமனைகள் இருப்பது அவசியம் என்பதால் அவர்களுக்கு வீட்டு வசதி ஏற்படுத்திக் கொடுப்பதற்கு நாம் நடவடிக்கை எடுப்போம். மேலும், ஏனைய அரசாங்க ஊழியர்களுக்கும் அவர்களது வேலைத்தலங்களுக்கு அருகாமையில் குடிமனைகள் அமைத்துக் கொடுப்பதற்கும் நடவடிக்கை எடுப்போம்.*

*மத்திய வருமானம் உடையவர்களுக்கான வீடுகளைக் கட்டிக் கொடுப்பதற்காக முதலீடு செய்யும்படி உள்நாட்டுத் தனியார்*

*நிறுவனங்களுக்கு அழைப்பு விடுப்போம். அதேபோன்று, உயர் வருமானம் உடையவர்களுக்கான வீடுகளைக் கட்டிக் கொடுப்பதற்காக வெளிநாடுகளில் வதியும் இலங்கை வம்சாவழியினருக்கும் அழைப்பு விடுப்போம்.*

*17* ***உல்லாசப் பயணத்துறை.***

*மாகாண உல்லாசப் பயண ஊக்குவிப்பு வாரியம் ஒன்றை நியதிச் சட்டம் மூலம் உருவாக்கி உல்லாசப் பயணத்துறைக்கு உந்துதல் கொடுப்போம். பயணிகளுக்கான விடுதிகளை அறுகம்குடா, கல்லடி, பாசிக்குடா, வாகரை, அலஸ்தோட்டம், நிலாவெளி, கன்னியா, கும்புறுப்பிட்டி முதலிய இடங்களில் கட்டுவதற்கு நடவடிக்கை எடுப்போம்.*

*உல்லாசப் பயணிகளை ஈர்ப்பதற்காக தென்னமரவடியில் உயிரியல் உல்லாசப் பூங்காவையும் மாகாணத்தின் வேறு தலங்களில் விலங்குப் பூங்கா, தாவரப் பூங்கா ஆகியவற்றையும் தாபிப்பதற்கு நடவடிக்கை எடுப்போம்.*

*18* ***நீர்ப்பாசனம்***

*திருகோணமலை மாவட்டத்தில் முதலிக் குளத்தின் நீர்த்தேக்கத்தை பெருக்குவதற்காக நெலு ஓயாவில் இருந்து கட்டமைக்கப்படும் ஊட்டுக் கால்வாய்ப் பணிகளை விரைவுபடுத்துவதுடன் நீலப்பணிக்கன் குளத்தின் நீர் மட்டத்தை உயர்த்துவதற்கான பணிகளையும் மேற்கொள்வோம்.*

*அத்துடன், மட்டக்களப்பு மாவட்டதிலுள்ள உன்னிச்சை, கிராம்புல் அணைக்கட்டு, மாவடி ஓடை நீர்ப்பாசனத் திட்டங்களைப் புனரமைப்பதற்கும் நடவடிக்கை எடுப்போம்.*

*19* ***கைத்தொழில்***

*மாகாணத்தில் கைத்தொழில்களை அபிவிருத்தி செய்து வேலை வாய்ப்புக்களை அதிகரிப்பது எமது முக்கிய குறிக்கோளாகும். கப்பல்துறையிலும், திரியாயிலும், தம்பலகாமத்திலும், மட்டக்களப்பு மாவட்டத்தில் வாகரையிலும், கொக்கட்டிச்சோலையிலும் தொழிற்பேட்டைகளை அமைப்போம்.*

*மட்டக்களப்பைச் சேர்ந்த மயிலங்கரைச்சையிலும் திருகோணமலையைச் சேர்ந்த சாம்பல்தீவிலும் ஆடைத் தொழிற்சாலைகள் அமைக்கப்படும். கும்புறுமூலையில் சேதமடைந்த அச்சுக்கூடம் மீளக்கட்டமைக்கப்படும்.*

*திருகோணமலையைச் சேர்ந்த கும்புறுப்பிட்டியில் விளையும் உப்பை மூலப் பொருளாகக் கொண்டு இயங்கும் ஓர் இரசாயனத் தொழிற்சாலையைத் தாபிப்போம்.*

*திருகோணமலை மாவட்டத்தில் அமைக்கப்படும் அனல் மின் நிலையத்திற்கு அண்மையில் ஒரு சீமெந்து தொழிற்சாலையும் அமைக்கப்படும். மின் நிலையத்திலிருந்து கிடைக்கும் சாம்பரும் இறக்குமதி செய்யப்படும் கிளிங்கரும் சீமெந்து உற்பத்திக்குப் பயன்படுத்தப்படும்.*

*மேலும், புல்மோட்டையிலிருந்து அகழ்ந்தெடுத்து வெறுமனே ஏற்றுமதி செய்யப்படும் மணலை பதனிடுவதற்காக தொழிற்சாலை ஒன்றை அமைத்து நாட்டின் வருமானத்தை பெருக்க வேண்டுமென்பதும் எமது குறிக்கோளாகும்.*

## 20 கடல் தொழில்.

பாதுகாப்புக் காரணங்களக்காக, கடல் தொழில் மீதான கட்டுப்பாடுகளை நீக்குவதற்கு நாம் மத்திய அரசாங்கத்திற்கு அழுத்தம் கொடுப்போம்.

மீனவர்கள் கடந்த காலத்தில் மிகவும் பாதிக்கப்பட்ட சமூகத்தினர் என்பதனால் அவர்களுக்குத் தேவையான அனைத்து வசதிகளையும் அரசாங்க செலவில் செய்து கொடுப்பதுடன் வறிய மீனவர் குடும்பங்களுக்கு வீட்டு வசதிகளையும் செய்து கொடுக்க நாம் நடவடிக்கை எடுப்போம்.

மாகாணத்திலுள்ள மீன்பிடித் துறைமுகங்களை மத்திய அரசாங்கத்திடமிருந்து பொறுப்பேற்று அவற்றை அபிவிருத்தி செய்வதற்கும் புதிய மீன்பிடித் துறைமுகங்களைக் கட்டுவதற்கும் நாம் நடவடிக்கை எடுப்போம்.

அத்துடன், மீன், இறால், நண்டு போன்ற கடல்தரும் வளங்களை பதனிட்டு வெளிநாடுகளுக்கு அனுப்புவதகு ஏதுவாக தொழிற்சாலைகளை மட்டக்களப்பு, திருகோணமலை, அம்பாறை மாவட்டங்களில் தாபிப்பதற்காக நாம் அழைப்பு விடுப்போம்.

## 21. சமூகக் காடுகள்

கிராமங்களில் சமூகக் காடுகளை வளர்ப்பதற்கு மக்களுக்கு ஊக்குவிப்பு அளிப்போம்.

## 22. மூலிகைத் தோட்டங்கள்

ஒவ்வொரு மாவட்டத்திலும் மூலிகைத் தோட்டங்களை உருவாக்குவதற்கும், ஆயுள்வேத மருத்துவத்தை அபிவிருத்தி செய்யவும் நாம் நடவடிக்கை எடுப்போம்.

## 23 சமயமும் கலாச்சாரமும்

யுத்தத்தாலும் சுனாமியினாலும் பாதிக்கப்பட்ட சமய மற்றும் கலாச்சாரத் தலங்கள் அனைத்தையும் புனரமைக்க எனது நிறைவேற்றுத்துறை நடவடிக்கை எடுக்கும். அத்துடன் கிழக்கு மாகாண மக்கள் மத்தியில் நிறைவேற்றுத்துறை சமய, கலாச்சார நிகழ்ச்சிகளுக்கு மத வேறுபாடுகளின்றி வாய்ப்பளிக்கும். அதேவேளை மத சார்பற்ற பொது வேலைத்திட்டத்தையே எமது நிறைவேற்றுத்துறை மேற்கொள்ளும்.

நாட்டுப்புறக்கலைகளுக்கு பெயர்போனது எமது கிழக்கு மாகாணமாகும். ஆனால் இன்றுவரை எமது மண்ணிற்கு சொந்தமான கலை, கலாச்சார, பண்பாட்டு அம்சங்களை வளர்த்து பாதுகாக்கக் கூடிய செயன்முறைகள் எம்மிடம் போதியளவு இல்லை. எனவே மேற்படி துறைகளை வளர்த்தெடுக்கும் வண்ணம் வேலைத்திட்டங்களை வகுத்து எடுக்க எமது நிறைவேற்றத்துறை முன்வரும். குறிப்பாக, பயிற்சிநெறிகள், ஊக்குவிப்புக்கள் போன்றவற்றை மேற்கொள்ளும். மேலும் நமது மண்ணின் அரிய கலைப்பொக்கிசங்களை திரட்டி நாட்டுப்புறவியல் நூதனசாலை ஒன்றை கிழக்கு மாகாணத்தின் மத்திய நகரமான மட்டக்களப்பில் நிறுவ ஆவனசெய்யப்படும்.

## 24 சமூக நலன்

*யுத்தத்தாலும் சுனாமியாலும் பாதிக்கப்பட்டு அநாதைகளான சிறார்களும், பெண்களும் தேடுவாரற்று வாழும் முதியவர்களும் புனர்வாழ்வு அளிப்பதற்காக நாம் விசேட திட்டங்களை அமுல் செய்வோம்.*

## 25 மாகாண சபையின் பேரவை

*மாகாண சபையின் பேரவைக்கான கட்டிடமொன்றைக் கட்டமைப்பதுடன் அப் பேரவையுடன் சம்பந்தப்பட்ட அலுவலகங்கள், நூலகம் பொது மக்கள் சந்திப்பிடம் முதலியவற்றைக் கட்டமைக்கவும் நடவடிக்கை எடுப்போம்.*

*மேலும், மாகாணசபை உறுப்பினர்களின் கடமைகள், அதிகாரங்கள் பற்றிய பட்டறைகளையும், கலந்துரையாடல்களையும் நடாத்தி உறுப்பினர்களின் பங்களிப்பை வலுவடையச் செய்வதற்கு நடவடிக்கை எடுப்போம்.*

## 26. இன நல்லுறவு

*எமது கிழக்கு மாகாணமானது தமிழர், முஸ்லிம்கள், சிங்களவர், பறங்கியர் எனும் நால்வகை இனங்களின் ஒருமித்த அடையாளமாகும். சுமார் ஆயிரம் ஆண்டுகால வரலாறு இங்கு வாழும் முஸ்லிம்களுக்கு உண்டு. நாமறிந்த வரையில் இந்த நீண்ட வரலாற்றுப் பாதையில் தமிழ் - முஸ்லிம் உறவானது மிகவும் பலமானதாகவும், இறுக்கமானதாகவும் இருந்து வந்திருக்கின்றது. ஆனாலும் தீவிரவாதம் ஏற்படுத்திய தாக்கங்களின் ஒன்றாக இந்த உறவில் பாரிய மாற்றங்கள் ஏற்பட்டுள்ளது. கடந்த 25 வருடகாலமாக கிழக்கு மாகாணம் எதிர்கொண்டுள்ள இந்த இன முரண்பாடுகளை நாம் கடந்து செல்ல வேண்டியுள்ளது. எமது மக்களின் மனங்களிலிருந்து இனக்குரோதங்களை அகற்ற நாம் அனைவரும் கடுமையாக போராடவேண்டியுள்ளது.*

*இன்று முதல் நாம் முன்னெடுக்கவிருக்கும் மக்கள் நலத்திட்டங்கள் அனைத்திற்கும் முன்நிபந்தனையாக இருப்பது "இன உறவை" கட்டியெழுப்ப வேண்டிய கடமையாகும். அதுமட்டுமன்றி இன்று எம்முன் எழுந்துநிற்கின்ற பெரும் சவாலுமாகும்.*

*இதற்காக, இன நல்லுறவுப் பணிப்பகம் ஒன்றினை அமைத்து செயற்படுத்த வேண்டியுள்ளது. இப்பணிப்பகமானது உண்மையைக் கண்டறியும் குழு, கண்காணிப்பு குழு, நல்லிணக்கக் குழு, அறிவியல் குழு, கலை இலக்கிய பண்பாட்டுக் குழு என சமூகத்தின் சகல மட்டங்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும். மாவட்ட ரீதியாக இக்கட்டமைப்பு தனது வேலைத்திட்டங்களை விரிவுபடுத்தும். இதில் அரசியல் அடையாளங்களுக்கு அப்பால் தமிழ், முஸ்லிம், சிங்கள நல்லுறவை விரும்புகின்ற புத்திஜீவிகள், சமூகசமயப் பெரியார்கள், எழுத்தாளர்கள், மாணவர் சமூகம் போன்றவற்றின் பிரதிநிதிகள் அடங்கிய குழுக்கள் நியமிக்கப்படும். இப்பணிப்பகமானது கிழக்கு மாகாணத்தின் முதலமைச்சரின் நேரடிக்கட்டுப்பாட்டின் கீழ் இயங்கும்.*

## *முடிவுரை*

***மதிப்பிற்குரிய தவிசாளர் அவர்களே!***

*எனது நிறைவேற்றுத்துறையின் கொள்கை அறிக்கையில் அடங்கிய விடயங்களை அடுத்த 18 மாதங்களுள் நடைமுறைப்படுத்துவதற்குப் பெரும் அளவில் நிதி அவசியம். எமக்குத் தேவையான நிதி உதவியை எமது உள்ஊர் முதலீடுகள் ஊடாகவும், எமது மத்திய அரசின் ஒதுக்கீடுகள் ஊடாகவும் பெற்றுக்கொள்ள முயல்வோம். மேலும் கிழக்கு மாகாண மக்களின் நலனில் அக்கறை கொண்டுள்ள நேச நாடுகளும் தந்து உதவும் என்ற நம்பிக்கை எனக்குண்டு. கிழக்கு மாகாணத்தின் பாதிக்கப்பட்ட மக்கள் சார்பில் நான் சர்வதேச சமூகத்திற்கு இவ் விடயம் சம்பந்தமாக வேண்டுகோள் ஒன்று விடுக்கின்றேன்.*

*எனது தலைமையிலான நிறைவேற்றுத்துறையின் கொள்கைப் பிரகடன உரையை சிற்றுரையை பொறுமையுடன் கேட்டுக் கொண்டிருந்தமைக்காக தங்களுக்கும் ஏனைய கௌரவ உறுப்பினர்களுக்கும் நன்றி கூறி முடித்துக் கொள்கின்றேன்.*